Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஆடி 27    [ 11-08-1993 ]    புதன்கிழமை    ஓசை 174

## குடும்ப அட்டை திருத்தம் செய்ய விண்ணப்பப்படிவம் இணைக்குக

குடும்ப பதிவு அட்டையில் புதிய பிறப்பு, இறப்பு பதிவுகளில் திருத்தம் போன்ற மாற்றங்களை செய்வதற்கும் புதிய பிரதி அட்டை பெறுவதற்கும் விண்ணப்பதாரர்கள் தங்கள்பகுதி கிராம உத்தியோகத்தரிடம் குடும்ப பதிவு அட்டை விண்ணப்பத்தைபெற்று அதை பூரணப்படுத்தி குடும்பப் பதிவு அட்டை உடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். அத்துடன் விண்ணப்பப்படிவங்கள் இணைக்கப்படாத குடும்பப்பதிவு அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதையும் குடும்ப அட்டை பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

## மண்கிண்டிமலை ராணுவ முகாம் வீழ்ச்சி

# பாதுகாப்பு அதிகாரிகள் மாநாட்டில் தளபதிகள் மீது ஜனாதிபதி பாய்ச்சல்!

## பகலில் தூங்கி இரவில் விழித்திருக்க இராணுவத்தினருக்கு அறிவுரை

(கொழும்பு)

மணலாற்றுப் பிரதேசத்தில் கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த மண்கிண்டிமலை இராணுவ முகாம் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது தொடர்பாக சிறிலங்காவின் ஜனாதிபதியும் முப்படைகளின் தளபதியுமான டி. பி. விஜேதுங்கா கடும் கோபம் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது, இதன் காரணமாக அண்மையில் இடம்பெற்ற உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் மாநாட்டில் அவர் ஆத்திரத்துடனும் காணப்பட்டதாக ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை தெரிவிக்கின்றது.

மணலாறில் சிறிலங்கா இராணுவத்தினரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மண்கிண்டிமலை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டது குறித்து சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இராணுவ உயர் அதிகாரிகள் மீது கடும் கோபம் கொண்டுள்ளதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஜூலை 25 ஆம் திகதி இராணுவத்திற்கு கிடைத்த மாபெரும் தோல்வியை அடுத்து உயர்மட்ட இராணுவ அதிகாரிகளின் கூட்டத்தை ஜனாதிபதி கூட்டியிருந்தார். இந்த படை அதிகாரிகளின் உயர்மட்ட மாநாடு ஒன்றரை மணி நேரம் நீடித்தது. இம் மாநாட்டின் போதே ஜனாதிபதி மிகவும் கண்டிப்பாகவும் ஆத்திரத்துடனும் காணப்பட்டதாக அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''உயர் அதிகாரிகள் தமது பணியை சரியாக செய்ய வேண்டும் அல்லது அதற்கான பிரதிபலனை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்'' என ஜனாதிபதி அதிகாரிகளை எச்சரித்தாராம். படைகள் இரவில் உறங்கி பகலில் ரோந்து செல்வதை விடுத்து பகலில் உறங்கி இரவில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளட்டும் என்றும் படைகள் தாக்குதலில்தான் ஈடுபடவேண்டும் என்றும் முப்படைத் தளபதியும் பாதுகாப்பு அமைச்சருமான ஜனாதிபதி விஜேதுங்க இந்த உயர் இராணுவ அதிகாரிகள் மாநாட்டில தெரிவித்தார்.

இவ்வேளையில் தம்மை காத்துக்கொள்ளும் வகையில் பேசிய பாதுகாப்பு உயர் அதிகாரிகள் இராணுவம் பதில் தாக்குதல் நடத்தியது என்றும் இத்தகைய பின்னடைவுகள்

## பாதுகாப்பு மாநாட்டில்

## கிளாலி கடற்பரப்பில் கைதான 5 பயணிகள் விரைவில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளாலி கடற்பரப்பில் கடந்தமாதம் நடைபெற்ற பயணிகள் மீதான தாக்குதல் சம்பவத்தின்போது கைது செய்யப்பட்ட ஒன்பதுபேரில் ஓட்டிகள் தவிர்ந்த ஏனைய ஐவரும் விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைகக்கப்பட்டுள்ள ஏழுபேரில் ஓட்டிகள் தவிர்ந்த ஏனைய மூவரும் இவ்வாரம் விடுவிக்கப்படவுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

மேலும் காயமடைந்து அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இரு பயணிகள் பலாலி முகாமிற்கு கொண்டுவரப்பட்டு விரைவில் விடுவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவ்வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

(யா)

### கிளாலி படுகொலை சம்பவம்

## படகோட்டிகள் மீது சட்ட நடவடிக்கையாம்

(யாழ்ப்பாணம்)

கிளாலி கடற்பரப்பில் கடந்த 28 ஆம் திகதி கடற்படையினர் பயணிகள் மீது நடாத்திய தாக்குதலின்போது கைது செய்யப்பட்ட நான்கு படகோட்டிகளும் தற்போது விடுதலை செய்யப்படமாட்டார்கள் என தெரியவருகிறது.

இந் நான்கு படகோட்டிகள் மீதும் சிறிலங்கா அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

மேலும் கிளாலி கடற்பரப்பு போக்குவரத்துக்குத் தடை

(4ஆம் பக்கம் பார்க்க)

## அரசு எம்மை விடுவிக்க

## 24 பயணிகளுக்கு குமாரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து ஏனைய மாவட்டங்களிற்கு பயணம் செய்யும் சுமார் 24 பயணிகளுக்கு ''குமாரி'' கப்பலில் செல்ல அனுமதி வழங்

(4ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று மாலை மக்கள் குடியிருப்புகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

நேற்று மாலை 6. 15 முதல் சுமார் 15 நிமிடங்கள் வரை இத்தாக்குதல் நடாத்தப்பட்ட போதிலும் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை.

(கொழும்பு)

மணலாற்றுப் பிரதேசத்தில் கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த மண்கிண்டிமலை இராணுவ முகாம் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது தொடர்பாக சிறீலங்காவின் ஜனாதிபதியும் முப்படைகளின் தளபதியுமான டி. பி. விஜேதுங்கா கடும் கோபம் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது, இதன் காரணமாக அண்மையில் இடம்பெற்ற உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் மாநாட்டில் அவர் ஆத்திரத்துடனும் காணப்பட்டதாக ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை தெரிவிக்கின்றது.

மணலாறில் சிறிலங்கா இராணுவத்தினரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மண்கிண்டிமலை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டது குறித்து சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இராணுவ உயர் அதிகாரிகள் மீது கடும் கோபம் கொண்டுளளதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஜூலை 25 ஆம் திகதி இராணுவத்திற்கு கிடைத்த மாபெரும் தோல்வியை அடுத்து உயர்மட்ட இராணுவ அதிகாரிகளின் கூட்டத்தை ஜனாதிபதி கூட்டியிருந்தார். இந்த படை அதிகாரிகளின் உயர்மட்ட மாநாடு ஒன்றரை மணி நேரம் நீடித்தது. இம் மாநாட்டின் போதே ஜனாதிபதி மிகவும் கண்டிப்பாகவும் ஆத்திரத்துடனும் காணப்பட்டதாக அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''உயர் அதிகாரிகள் தமது பணியை சரியாக செய்ய வேண்டும் அல்லது அதற்கான பிரதிபலனை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்'' என ஜனாதிபதி அதிகாரிகளை எச்சரித்தாராம். படைகள் இரவில் உறங்கி பகலில் ரோந்து செல்வதை விடுத்து பகலில் உறங்கி இரவில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளட்டும் என்றும் படைகள் தாக்குதலில்தான் ஈடுபடவேண்டும் என்றும் முப்படைத் தளபதியும் பாதுகாப்பு அமைச்சருமான ஜனாதிபதி விஜேதுங்க இந்த உயர் இராணுவ அதிகாரிகள் மாநாட்டில தெரிவித்தார்.

இவ்வேளையில் தம்மை காத்துக்கொள்ளும் வகையில் பேசிய பாதுகாப்பு உயர் அதிகாரிகள் இராணுவம் பதில் தாக்குதல் நடத்தியது என்றும் இத்தகைய பின்னடைவுகள் போரிடும் போது நிகழத்தான் செய்யும் என்றும் கூறினர்.

அத்துடன் பாதுகாப்பு படைகளிடம் காணப்பட்ட போரிடும் பாங்கு குறைவும் உற்சா

(4ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு மாநாட்டில் தளபதிகள் மோதல்

(கொழும்பு)

மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து படை உயர் அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதி விஜேதுங்க கலந்து கொண்ட பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் கூட்டுப் படைத் தலைமையகத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவும், இராணுவத் தளபதி லெப். ஜெனரல சிசில் வைத்தியரட்னவும் பலத்த வாக்குவாதப்பட்டதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மாநாட்டின் ஒரு கட்டத்தில் பேசிய ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, ''ஜனகபுர முகாம் சரியான முறையில் அமைக்கப்படவில்லை. வெளிப்புற பாதுகாப்பு முன்னணி எல்லைகள் சரியாக நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை'' என்று குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்ட இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன, ''இராணுவம் தனது நடவடிக்கையின்போது தோல்வியை சந்தித்தால் அதற்கு இராணுவமே காரணம் எனக் கூறப்படுகிறது. இராணுவம் வெற்றி பெறும் போது அதற்கான பாராட்டை கூட்டுப்படைத் தலைமையகம் தனதாக்கிக் கொள்கிறது'' என்றார். ''இராணுவத்தின் போர் மூலோபாயத்தை வகுப்பதிலோ அல்லது படை நகர்வுகளை தீர்மானிப்பதிலோ தமக்கு எந்த அதிகாரமும் இப்போது இல்லை என்றும் இவற்றுக்கு கூட்டுப் படைத் தலைமையகமே பொறுப்பு என்றும் இராணுவத் தளபதி சிசில் மேலும் தெரிவித்தார்.

# வியாபாரிகள் போல் நடித்து புலிகள் முகாம்பற்றி அறிந்தனராம்

(கொழும்பு)

மணலாறு முகாமைத்தாக்கி அழிப்பதற்கு முன்பாக விடுதலைப்புலிகள் மாறுவேடங்களில் பல தடவைகள் முகாமிற்குள் வந்து சென்றிருக்கின்றனர் என மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு தொடர்பாக ஆராய கொழும்பில் கூட்டப்பட்ட படை உயர் அதிகாரிகள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

புலிகள் முகாமைத் தாக்குவதற்கு முன்பாக சாதாரண வியாபாரிகள் போன்று இம் முகாமிற்கு வந்து சென்றனர். இதுவே அவர்கள் தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்த போது இராணுவ தொலைத் தொடர்பு கட்டுப்பாட்டு அறைக்குள் உடனடியாகவே புகுந்து அதனை செயலிழக்கச் செய்ய வழிவகுத்தது என இம் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் இம் முகாமை தாக்க சுமார் 500 புலிகள் தயாராகி வருவதாக மூன்று மாதத்திற்கு முன்பாகவே புலனாய்வுத் தகவல்கள் கூறியதாகவும், அத்துடன் தாக்குதலுக்கு மூன்று நாள்களுக்கு முன்பே முகாம் பாதுகாப்பு குறித்து எச்சரிக்கப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டதாம்.

# மண்கிண்டிமலை தாக்குதல் எதிரணியினருக்கு விளக்கம்

(கொழும்பு)

மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளா அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்குள்ள நிலைமைகளை விளக்க எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றை கூட்டுப்படைத் தலைமையகத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க கடந்த வியாழனன்று கூட்டினார்.

இக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா, ஈ. பி. ஆர். எல். எப். சுரேஷ் பிரேமச்சந்திரன், அநுருத்த ரத்வத்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிளாலி கடற்பரப்பில் கடந்தமாதம் நடைபெற்ற பயணிகள் மீதான தாக்குதல் சம்பவத்தின்போது கைது செய்யப்பட்ட ஒன்பதுபேரில் ஓட்டிகள் தவிர்ந்த ஏனைய ஐவரும் விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைககப்பட்டுள்ள ஏழுபேரில் ஓட்டிகள் தவிர்ந்த ஏனைய மூவரும் இவ்வாரம் விடுவிக்கப்படவுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

மேலும் காயமடைந்து அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்கள் பலாலி முகாமிற்கு கொண்டுவரப்பட்டு விரைவில் விடுவிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அவ்வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

(பா)

கிளாலி படுகொலை சம்பவம்

# படகோட்டிகள் மீது சட்ட நடவடிக்கையாம்

(யாழ்ப்பாணம்)

கிளாலி கடற்பரப்பில் கடந்த 28 ஆம் திகதி கடற்படையினர் பயணிகள் மீது நடாத்திய தாக்குதலின்போது கைது செய்யப்பட்ட நான்கு படகோட்டிகளும் தற்போது விடுதலை செய்யப்படமாட்டார்கள்என தெரியவருகிறது.

இந் நான்கு படகோட்டிகள் மீதும் சிறிலங்கா அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

மேலும் கிளாலி கடற்பரப்பு போக்குவரத்துக்குத் தடை

(4ஆம் பக்கம் பார்க்க)

# அரசு எம்மை விடுவிக்க இறுதிச் சந்தர்ப்பம் இதுவே

## யுத்தக் கைதிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசு எம்மை விடுதலை செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய கடைசிக் கட்டம் இதுதான். இதன்பின்னர் அரசாங்கம் எமது விடுதலை தொடர்பான நடவடிக்கையில் ஈடுபடும் என நாம் நம்பிக்கை கொள்ளவில்லை.

இவ்வாறு சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவரும் யுத்தக் கைதிகளில் ஒருவரான பண்டார என்பவர் எமது செய்தியாளரிடம் நேற்றுத் தெரிவித்தார்.

சக்தியற்ற நிலையில் வேதனையுடன் மிக மெதுவாகவே அவர் பேசினார்.

ஜனாதிபதி, கூட்டுப்படைத் தலைமையகத் தளபதி ஹமில்டன் வனசிங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏயர் வைஸ் மார்சல் வேல்டர் பெனாண்டோ ஆகியோருக்கு கைதிகளின் பெற்றோர் தமது பிள்ளைகளின் நிலையை விளக்கியும் விடுதலைக்கான முயற்சிகள் மேற்கொள்ளும்படி கோரியும் கடிதம் எழுதியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று யுத்தக் கைதிகளில் ஒருவரான ஜெயதிலக (30) என்பவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இவரின் உடல் நிலை மோசமடைந்ததை அடுத்தே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

தசாநாயக, கருணாநாயக என்ற இரு கைதிகள் நேற்று வைத்தியசாலையில் சோதனைக்குட்படுத்தப்பட்டபின்னர் மீண்டும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (தி) (சி)

# அரச அதிபர் கொழும்பு பயணம்

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இன்று கொழும்பிற்குப் புறப்பட்டுச் செல்கின்றார்.

இவர் இன்று காலை சாகும் வரை உண்ணாவிரதமிருக்கும் யுத்தக்கைதிகளை சந்தித்து உரையாடிய பின்னர் இங்கிருந்து புறப்பட்டுச் செல்வார் என தெரியவருகின்றது.

மேலும் இவர் கொழும்பு சென்றதும் யுத்தக்கைதிகளின் விடுதலை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்துடன் பேச்சுக்களை மேற்கொள்வார்என தெரியவருகின்றது. (பா)

# வெள்ளி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று மட்டும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் எனவும் இதே வேளை இன்றும் நாளையும் படகுச்சேவை நடைபெறமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுட்டிலக்கம் நாளை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெற இருக்கின்ற 5ஆம்ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய பரீட்சார்த்திகளின் சுட்டிலக்கங்கள் மற்றும் ஆவணங்களை அந்தந்தப்பகுதி கோட்டங்கள் மூலம் விநியோகிக்க

(4ஆம் பக்கம் பார்க்க)

# மாதகல் பகுதியில் காவலரண்கள் அதிகரிப்பு

மாதகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தொகை தற்போது அதிகரித்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இப்பகுதியில் இராணுவத்தினரின் காவல் அரண்களும் அதிகரித்து வருகின்றன.

அதே சமயம் இளவாலையில் இராணுவத்தினர் குறைந்திருப்பதோடு. காவல் அரண்கள் சில மூடப்பட்டு வருவதாகவும்அச்செய்திகள் மேலும் தெரிவித்தன. (யோ)

# இளவாலை பகுதியிலிருந்து மூவர் நேற்று விடுவிப்பு

(வடமராட்சி)

இளவாலையில் சிறிலங்கா இராணுவத்தினரின் பிடியில் சிக்கி பன்னிரண்டு மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தோரில் மூவர் நேற்று விடுவிக்கப்பட்டனர். இவர்கள் மூவரையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் 'குமாரி' கப்பல் மூலம் கூட்டிவந்தனர்

இளவாலையைச் சேர்ந்த பிலிப்பன் - சுயித்தான் (வயது 58), கஸ்பர் - ஆசிர்வாதம் (வயது 58), வில்லியம் ஜெயரட்ணம் - ரீட்டா [வயது 43] ஆகியோரே நேற்று விடுவிக்கப்பட்டவர்களாவர். இதில் ரீட்டா என்ற பெண் மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

இவர்கள் 92 ஆம் ஆண்டு ஆவணி மாதம் இருபதாம் திகதி சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்டவர்கள். மற்றும் இக்கப்பலில் அனலை தீவுக்குச் சென்றிருந்த பூசகர்கள் நால்வரும் வந்தனர். (யோ)

# தாண்டிக்குளம் முகாமில் இருதமிழர் கைது

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ முகாமில் நேற்று வடபகுதிநோக்கிவந்த இருவர் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார்சைக்கிள் 'கேபில் வயரை' வெற்றிலைத் தட்டுக்குள் வைத்து வடபகுதிக்குள் கடத்தி வரமுயன்றதாகக் கூறப்பட்டு ஒட்டிசுட்டான் சின்னச் சாளம்பனையைச் சேர்ந்த சத்தியசீலன் (வயது 20)எனும் இளைஞர் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மேலும் பறநட்டகல் ஓமந்தையைச் சேர்ந்த முருகேசு என்பவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தெரியவந்துள்ளது.

# வரி விளம்பரம்


## ஸ்ரீகாந்த் புத்தகசாலை

இந்திய நாவல்கள், டிக்செனெறிகள், இலங்கை வெளியீடுகள் ஆங்கில தமிழ் சொற்களஞ்சியம், (மற்றாஸ் டிக்செனெறி) சீவம் இன்டஸ்றீஸ் வெளியீடுகளும், அருள் உரை ஆகியவை. நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ காந்தி புத்தகசாலை நல்லூர்
(சி-7134)

## றேடியோ, மணிக்கூடுகளின் சேவிஸ் கட்டணங்கள்

வைண்டிங்கடிகாரங்கள் 90/- ஓட்டோமெற்றிக் கடிகாரங்கள் 125/- எலெக்ரோனிக் கடிகாரங்கள் 90/-, 150/-மேசை சுவர்மணிக்கூடுகள் 100 - 200 றேடியோமட்டும் 150/- கசற் றேடியோ— 200/- இவையாவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். (சி/7113)

## மிருதங்கம்

தோல் வாத்தியங்கள் முழு வேலைகளும் ஒரு கிழமைக்குள் நல்ல முறையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.
(5658)

## விற்பனைக்கு

எம்மிடம் கடைப் பாவனைக்குரிய கண்ணாடி ஷோக்கேஸ்கள் (Show Case Glass) விற்பனைக்குண்டு தொடர்பு: பொ. துரைச்சாமி, 15/6 கச்சேரி கிழக்கு, றெயில் றோட், யாழ்ப்பாணம். (5644)

## விற்பனைக்கு

புதிய றீபோட் தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சு இயந்திரம். விற்பனைக்குண்டு. தொடர்பு:- ம. சுஜீவன், 8/1 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (5660)

## இரவல் கொடுக்கும் சேவை

றெக்கிளமேசன் சனசமூக நிலைய நூல்கள் இரவல் கொடுக்கும் சேவை மீளவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதனை குருநகர் பகுதி...


## அத்துலத்முதலி ஞாபகார்த்த நிதியம்

முன்னாள் அமைச்சரும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவருமான லலித் அத்துலத் முதலி ஞாபகார்த்த நிதியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு உள்ளது.


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 20 – 07 – 1920



உதிர்வு: 24 – 07 – 1992

## திருவாளர் சி. சுப்பிரமணியம்

திதி : 11- 08- 1998

எங்கள் அன்புத்தெய்வமே பண்பின் சிகரமே
குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்தீரே.
ஈடு செய்ய முடியாத உங்கள் பேரிழப்பை
நம்ப மனம் மறுக்கின்றது.
எத்தனை யுகம் சென்றாலும்
உங்கள் பிரிவை ஆற்ற முடியாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

கரணவாய் மேற்கு, கரவெட்டி. -மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(5612)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 27-12-1974

வீரச்சாவு: 11 - 08 - 1992

வீரவேங்கை

### முதல்வன் / ஞானவேல்

(தேவராசா சிறிராசா)

[சிவகாமி அம்மன் கோவிலடி, காரைநகர் ]

[அலம்பிலில் சிறிலங்கா இராணுவத்துடனான ...]


## மீளக் குடியமர்வு அலவன்சு இதுவரை கொடுக்கவில்லை

(திருமலை)

இடம் பெயர்ந்திருந்து மீளக் குடியேறுவோருக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட விசேட அலவன்சு, 2000 ரூபா மற்றும் உற்பத்தி அலவன்சு 4000 ரூபா என்பன இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

மேலும் திருக்கோணமலை மாவட்டத்தில் இன வன்செயல்கள் காரணமாக போசாக்கின்மை போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களும் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களும் அதிகரித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.


பேராதனைப் பல்கலைக்கழக (வெளிவாரி) கலைமாணி இறுதி வருட மாணவர்களுக்கான [B. A]

## விசேட விரிவுரைகள்

### அரசியல் விஞ்ஞானம்

எமது முன்னாள் விரிவுரையாளர்
திரு வே. சிவயோகலிங்கம்
[விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம்]

ஆரம்பம் 11-08-1993 காலை 10மணி

பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/7175)

## 7-ம் மாதம் நினைவஞ்சலி



வங்கக் கடலில் காவியம் படைத்த

### மேஜர் மலரவன் - வேலன்

(சுந்தரலிங்கம் சுந்தரவேல்)

[ஹாட்லிக் கல்லூரி மாணவன்]

தோற்றம்: 11. 03. 1969

வீரச்சாவு: 16. 01. 1993

தானைத் தளபதியாம்
தம்பி பிரபாவின்
சேனைப் படைதனிலே


## நினைவு கூருகின்றோம்... 1993-08-11

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்-சுன்னாகம் சிறிலங்கா காவல் நிலையத்தில் பொறிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய,

சஞ்சீவி (வைத்திலிங்கம் மகேசநாதன் - வீரமாணிக்கதேவன்துறை, மயிலிட்டி-யாழ்)

நிக்கி (வைத்திலிங்கம் நிகேதரன்-ரயில்நிலையவீதி, சுன்னாகம்-யாழ்)

1985ஆம் ஆண்டு யாழ் - தாவடிச்சந்தியில் காவல் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் விழுப்புண் அடைந்திருந்து யாழ்-மருத்துவமனையில் வீரச்சாவெய்திய,

பீடல் (சர்வானந்தன் சசிக்குமார்-சாள்ஸ்வீதி, கோண்டாவில் மேற்கு-யாழ்)

1987ஆம் ஆண்டு சாவகச்சேரி-சங்கத்தானைப்பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

2-ம் லெப் அப்பன் (வெற்றிவேலு சிவசிறீ-இத்தாவில் - பளை)

2-ம் லெப். சதீஸ் (சற்குணநாதன் பிரகலாதன்-உசன், மிருசுவில், கொடிகாமம்-யாழ்)

கருணா (செல்லத்துரை தயாகரன் - நாகர்கோவில் வீதி, எழுதுமட்டுவாள் தெற்கு)

கமல் (கனகலிங்கம் சிவனேசன்-மீசாலை தெற்கு, சாவகச்சேரி-யாழ்)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

லெப். ரகுபதி (ஆரோக்கியசாமி சாம்சன் மத்தியூஸ் சந்தி ஒழுங்கை, மாதகல்-யாழ்)

1989ஆம் ஆண்டு யாழ்-பண்டத்தரிப்பில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பெண் உட்பட 02 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு சுண்டிக்குளத்தில் சிறிலங்காக் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

மதன் (— — திருமலை)

மன்னார்-அச்சங்குளம், நானாட்டான் பகுதியில் பாம்பு தீண்டியதில் எமைப்பிரிந்த,

2-ம் லெப். தான்பரீன் (செபமாலை ஜேசுதாசன்-தாமரைக்குளம், அடம்பன்-மன்னார்)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 15 தமிழர்கள்.

சம்மாந்துறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 37 தமிழர்கள்.

மட்டு. மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது படுகொலை செய்யப்பட்ட இளைஞர்கள் உட்பட வந்தாறுமூலை ஐயங்கேணி, சித்தாண்டிப்பகுதிகளைச் சேர்ந்த 03 தமிழர்கள். சுற்றிவளைப்பின்போது படுகொலை செய்யப்பட்ட நொச்சிமுனை, அனுமார்வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் முஸ்லிம் காடையர்களினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட ஏறாவூரைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

சிங்களக் காடையர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட கொம்மாந்துறையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட யாழ் - மத்திய கல்லூரி மாணவன் கொல்லங்கலட்டிப் பகுதியில் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு ஆ.க.வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய-

நடேசன் (தங்கையா திருச்செல்வம் - பசுமின் வீதி, 3-ம் வாய்க்கால் - கிளிநொச்சி)

கப்டன் அன்ராஜ் (இராமச்சந்திரன் சங்கர் - வட்டக்கண்டல் - மன்னார்)

துப்பறி (குணபாலசிங்கம் திருக்குமாரன் - மீசாலை வடக்கு - கொடிகாமம்)

1992ஆம் ஆண்டு மணலாறு - அளம்பில் முகாமிலிருந்து ...

கள் (Show Case Glass) விற் பனைக்குண்டு தொடர்பு: பொ. துரைச்சாமி, 15/6 கச்சேரி கிழக்கு, றெயில் றோட், யாழ்ப்பாணம். (5644)

## விற்பனைக்கு

புதிய ஒலிபோட் தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ம. சுஜீவன், 8/1 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (5660)

## இரவல் கொடுக்கும் சேவை

றெக்கிளமேசன் சனசமூக நிலைய நூல்கள் இரவல் கொடுக்கும் சேவை மீளவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதனை குருநகர் பங்குத் தந்தை பி. எம். இம்பனுவல் அடிகளார் திறந்துவைத்துள்ளார். (17)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம் ஈச்ச மோட்டை கலட்டிப்புலம் சிறிஞான வைரவர் தேவஸ்தானத்தில் அஷ்டோத்தர சஹஸ்ரசங்காபிஷேகம் நாளை புதன்கிழமை காலை ஒன்பது மணி முதல் நடைபெறவுள்ளது.



மலர்வு:
27-12-1974

வீரச்சாவு:
11-08-1992

வீரவேங்கை

## முதல்வன் / ஞானவேல்

(தேவராசா சிறிராசா)

[சிவகாமி அம்மன் கோவிலடி, காரைநகர்]

[அலம்பிலில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்]

புயலாக நீ நின்று போராடினாய் - வீரப்
புலியாக எதிரி படையை எதிர் கொண்டாய்
தாயக விடிவிற்காய் தன்னுயிரைக் கொடுத்தவனே
உன் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதர, சகோதரிகள்.

ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

(5659)



வங்கக் கடலில் காவியம் படைத்த

## மேஜர் மலரவன் - வேலன்

(சுந்தரலிங்கம் சுந்தரவேல்)

[ஹாட்லிக் கல்லூரி மாணவன்]

தோற்றம்: 11. 03. 1969

வீரச்சாவு: 16. 01. 1993

தானைத் தளபதியாம்
தம்பி பிரபாவின்
சேனைப் படைதனிலே
சேர்ந்து நின்று
வீறு கொண்ட வேங்கைகளாய்
வீதி உலா வருகையிலே
வல்லரசாம் இந்திய அரசு
வஞ்சகமாய் வங்கக் கடலில் பிடித்திடவே
தம்மையே தாம் தகர்த்தெறிந்து
வங்கக் கடலதனில் காவியம் படைத்த
மேஜர் மலரவனாம் வேலன்
அவரோடு மரணித்த வேங்கைகளுக்கும்
எமது அஞ்சலிகளை செலுத்துகின்றோம்.

மகளிர் அபிவிருத்திச் சங்கம்

வியாபாரிமூலை. (5641)

யப்பட்ட இளைஞர்கள் உட்பட வந்தாறுமூலை ஐயங்கேணி, சித்தாண்டிப்பகுதிகளைச் சேர்ந்த 03 தமிழர்கள். சுற்றிவளைப்பின்போது படுகொலை செய்யப்பட்ட நொச்சிமுனை, அனுமார்வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் முஸ்லிம் காடையர்களினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட ஏறாவூரைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

சிங்களக் காடையர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட கொம்மாந்துறையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட யாழ் - மத்திய கல்லூரி மாணவன் கொல்லங்கலட்டிப் பகுதியில் உலங்கு வானூர்தியிலிருந்து மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு ஆ. க.வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச் சாவெய்திய-

**நடேசன்** (தங்கையா திருச்செல்வம் - பசுமின் வீதி, 3-ம் வாய்க்கால் - கிளிநொச்சி)

**கப்டன் அன்ராஜ்** (இராமச்சந்திரன் சங்கர் - வட்டக் கண்டல் - மன்னார்)

**துப்பறி** (குணபாலசிங்கம் திருக்குமாரன் - மீசாலை வடக்கு - கொடிகாமம்)

1992ஆம் ஆண்டு மணலாறு - அளம்பில் முகாமிலிருந்து வீதித்தடைகளை அகற்றவென வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**முதல்வன்/ஞானவேல்** (தேவராசா சிறீராசா - காரைநகர் - யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7173)

# நெஞ்சில் நீளும் நினைவுகள்

| 9-ம் ஆண்டு | 5-ம் ஆண்டு | 4-ம் ஆண்டு | 4-ம் ஆண்டு | 4-ம் ஆண்டு | 2-ம் ஆண்டு |
|---|---|---|---|---|---|
|  |  |  |  |  |  |
| வீரவேங்கை | நாட்டுப்பற்றாளர் | | கடற்புலி கப்டன் | | வீரவேங்கை |
| **சஞ்சீவி** | **சோதி** | **குட்டி** | **நெடுமாறன்** | **சிறி** | **பதுமநிதி** |
| (வைத்திலிங்கம் மகேசநாதன்) | (வைத்திலிங்கம் பரமநாதன்) | (வைத்திலிங்கம் தங்கேஸ்வரன்) | (வைத்திலிங்கம் கணேசநாதன்) | (சோமசுந்தரம் சிறிதரன்) | (சிறிதரன் சுதாசினி) |
| பிறப்பு: 01.07.1960 | பிறப்பு: 18 02 1949 | பிறப்பு: 07.03.1952 | பிறப்பு: 17-01-1964 | பிறப்பு: 30-10-1944 | பிறப்பு: 04-10-1974 |
| வீரச்சாவு: 11.08.1984 | இந்திய பரா ராணுவத்தினாலும்தேச விரோதிகளாலும் சுடப்பட்டுசாவு: 01,10 1988 | கடற்படையால் தாக்கப்பட்டுசாவு: 01 02 1989 | வீரச்சாவு: 30.08 1989 | இந்திய ராணுவத்தால் தாக்கப்பட்டு சாவு: 25.05.1989 | வீரச்சாவு: 08.08.1991 |

இலட்சியத்தை நோக்கிய உங்கள் பாதச் சுவடுகளைத் தொடர்ந்து நடையிடுவோம்.

தற்போதைய முகவரி:- சிவன்வீதி, உரும்பராய். உங்களின் பணியைத் தொடரும் **குடும்பத்தினர்** வீரமாணிக்கதேவன்துறை, மயிலிட்டித்துறை.

(5653)

சிந்தனைக்கு

ஒவ்வொரு அரசியல் பிரச்சினையும், சமூகப் பிரச்சினை ஆகி வருகின்றது. ஒவ்வொரு சமூகப்பிரச்சினையும், ஒரு சமயப்பிரச்சினை ஆகிவருகிறது.

– ரிச்சர்ட் தியோடோர் ஏலி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-08-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## தமிழகத்தில் மத வன்முறை

இந்து தீவிரவாத அமைப்பான ஆர்.எஸ் எஸ் அமைப்பின் சென்னையிலுள்ள தமிழக தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பானது தமிழக அரசியலிலும், மக்கள் மத்தியிலும் தற்பொழுதுள்ள குழப்ப நிலையை மேலும் அதிகரித்துள்ளது. இக்குழப்ப நிலையானது ஜெயலலிதா அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கே பெரும் நெருக்கடியை உருவாக்கக் கூடியதாகும்.

பதினொரு பேரைப் பலி கொண்ட இக்குண்டு வெடிப்பிற்கு யார் காரணம் என ஆதாரபூர்வமாக இதுவரை நிருபிக்கப்படவில்லை ஆயினும் முஸ்லிம் தீவிரவாத அமைப்பான ஐ எஸ். எஸ். மீதே குற்றம் சாட்டப்படுகின்றது. அதேவேளை கடந்த மார்ச் மாதத்தில் பம்பாயில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பிற்கும், இதற்கும் தொடர்பு ஏதாகிலும் உண்டா எனவும் ஆராயப்பட்டு வருவதாகப் பொலிஸ் தரப்பு தெரிவிக்கின்றது.

எது எவ்வாறு இருப்பினும் இக்குண்டுவெடிப்பானது. ஜெயலலிதா அரசிற்கு நெருக்கடியை அதிகரிக்கும் என்பதைக் கூறுவதற்குப் பெரிய ஆராய்ச்சி ஒன்றும் தேவையில்லை. ஏற்கனவே சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டதாகவும், ஊழல் அதிகரித்துள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஜெயலலிதா அரசிற்கு இது பெரும் சவாலான தொன்றாகவே இருக்கும். மேலும், கடந்த மாதம் இடம்பெற்ற பிரதமர் நரசிம்மராவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்ததின் மூலம் முற்றிய பகையை இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மத்திய அரசு தீர்த்தும் கொள்ள வாய்பபும் உண்டு.

இருப்பினும், ஜெயலலிதா அரசிற்கு இக்குண்டு வெடிப்பு ஏற்படுத்தியுள்ள கெடுதல் என்பதை விட தமிழகத்திற்கு ஒட்டுமொத்தமாக ஏற்படுத்திய கெடுதல் பெரிதாகும். இந்தியாவிலேயே

# ஒருகோடி 85 லட்சத்தையும் கடந்து உலக அகதிகள் தொகை பெருகுகிறது

1951ஆம் ஆண்டில் அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் உருவாகியபோது உலகெங்கும் ஏறத்தாழ 20 இலட்சம் பேர் அகதிகளாக இருந்தனர். இன்று உலக அகதிகள் தொகை ஒரு கோடி 85 இலட்சத்தை தாண்டியுள்ளது.

மேலும் 2 கோடி ஆண்கள், பெண்கள், குழந்தைகள் தங்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இதன்படி உலகசனத் தொகை 520 கோடியை எட்டியுள்ள இவ் வேளையில் ஒவ்வொரு 135 பேருக்கும் ஒருவர் என்ற அடிப்படையில் அகதிகளாகி உள்ளனர். உலகில் கெடுபிடி யுத்தத்தை அடுத்து இனவெறுப்பு உணர்வினால் உருவாகும் போர்கள் மனித உரிமை மீறல்கள் போன்றவையே. அகதிகள் வெளியேற்றத்திற்கு முக்கிய காரணிகளாக இருக்கின்றன.

உண்மையில், எல்லா நாடுகளிலும் இனங்களுக்கிடையிலான பதற்ற உணர்வே இடம் பெயரும் பிரச்சினைகள் தலைதூக்குவதற்கு ஒரு பொதுக் காரணியாக அமைந்துள்ளது. சிறுபான்மைக் குழுக்களின் உரிமைகளுக்கு மறுப்பும் பாதுகாப்பும் இல்லாதிருப்பது எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுவதுபோல பதற்றத்தை மேலும் மோசமடையச் செய்கிறது. முன்னைநாள் யூகோசிலேவியாவில் ஏற்பட்ட பிரச்சினைகளை அவதானிக்கும் போது இது எமக்கு தெளிவாகிறது. அங்கு 30 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் யுத்தம், போரழிவு, பாலியல் வன்முறை, துன்புறுத்தல் போன்றவற்றிலிருந்து தப்புவதற்காக தாங்கள் வீடுகளிலிருந்து பலவந்தமாக வெளியேற வேண்டி இருந்தது.

பொஸ்னியாவிலும் ஹெர்சகோவியாவிலும் 23 இலட்சம் பேர் தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்கு சர்வதேச உதவியில் தங்கியுள்ளார்கள். மேலும் கிழக்கே முன்னைநாள் சோவியத் யூனியன் குடியரசுகளில் மிக வறிய நாடான தஜிகிஸ்தானில் சனத்தொகையில 10வீதமானோர் ஏற்கனவே இடம்பெயர்ந்து உள்ளனர். தெற்கு. கிழக்கு பிராந்தியங்களில் இடம் பெறும் சண்டை காரணமாக மேலும் கணிசமான தொகையினர் தொடர்ந்தும் வெளியேறி வருகிறார்கள்.

இதுவரை அறுபதினாயிரம் தஜிகிஸ்தானியர்கள் எல்லையைக் கடந்து ஆப்கானிஸ்தானிற்குள் சென்றுள்ளனர். அங்குநிலவும் மிகக்கஷ்டமான சூழ் நிலையிலும் இவர்கள் அங்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளனர். முன்னாள் சோவியத் குடியரசுகளான ஆர்மேனியாவிற்கும் அஜர் பைஜானுக்கும் இடையே 5 வருடங்களாக இருந்துவரும் நாகோர்ணோ-ஹரபாச் பிராந்திய பிரச்சினை தொடர்பாக இருதரப்பிலும் தோன்றியுள்ள பல லட்சக்கணக்கானோர் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

அஜர்பைஜானில் ஏப்ரல் மாதம் புதிதாக மூண்ட சண்டை காரணமாக ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்தபோது அங்கு நெருக்கடி மேலும் உக்கிரமடைந்தது மேற்கு அஜர்பைஜானில் ஆயிரக்கணக்கான அகதிகள் பனிப்படலத்தினால் மூடப்பட்ட மலைகளைக் கடந்து தப்பிச்சென்றனர். ஆபிரிக்காவில் பலதரப்பட்ட பிணக்குகளும் அவற்றுக்கான தீர்வு முயற்சிகளும் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன.

சோமாலியாவில் இனப் போட்டிகளால் அயல் நாடுகளுக்கு சுமார் 10 இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

லோமேயில் ஜனவரி மாதத்தில் மூண்ட சண்டைகளால் இரண்டு லட்சத்து எண்பத்தி எட்டாயிரம் டோகோலியர்கள் இடம்பெயர்ந்து அயல் நாடுகளுக்குச்சென்றனர் பெனினில் தற்போது 1,68,000 அகதிகளும் கானாவில் 1,20,000 அகதிகளும் புகலிடம் பெற்றுள்ளனர்.

இனப்பதற்றம், அடக்குமுறை பெருமளவிலான மனித உரிமை மீறல் ஆகியன காரணமாக அகதிகள் பெருகிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## பஜனைப் பாதயாத்திரை

நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்திலிருந்து நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாவையொட்டி ஆண்டுதோறும் சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாசத்தினரால் நடாத்தப்பெற்று வந்த நயினை நல்லூர் பஜனைப் பாதயாத்திரை தற்போதைய நாட்டின் சூழ்நிலை காரணமாக சென்ற ஆண்டு நடைபெற்றதுபோல் இவ்வாண்டும் நடைபெற உள்ளது 14-8 93 சனிக்கிழமை அதிகாலை அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி பல ஆலயங்களில் பஜனை நடாத்தி இறுதியாக 16-8 93 திங்கள் அதிகாலை நல்லூர் கந்தன் ஆலயத்தைச் சென்றடையும்.

## வினாத்தாள்கள் வந்தன

[யாழ்ப்பாணம்]

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள்களும் க பொ. த உயர்தரப் பரீட்சைக்கான இரண்டாம் தொகுதி வினாத்தாள்களும் நேற்று யாழ். கல்வித் திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட்டன.

நரோமா கப்பல் மூலம் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு ஏற்றி வரப்பட்ட இந்த வினாத்தாள்கள், காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து குமாரி கப்பலமூலம் பருத்தித்துறைக்கு ஏற்றி வரப்பட்டன.

## குண்டுவெடிப்பு சம்பவம் மாநிலம் சம்பந்தப்பட்டதல்ல

### முதல்வர் ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

பம்பாய், கல்கத்தா குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து சென்னையிலும் இது நிகழ்ந்திருப்பதால் இது பல்வேறு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை என்றும், அதனால் சி. பி. ஐ இதனை விசாரிக்க வேண்டும் என்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட்டுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், தமது வேண்டுகோள் குறித்து உள்நாட்டுப் பாதுகாப்பு இணை அமைச்சர் உடனடியாக உறுதிமொழி எதனையும் தரவில்லை எனவும் பிரதமரின் கவனத்திற்கு இதனைக் கொண்டுவர இருப்பதாகக் கூறியதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்ட பின் டில்லி திரும்பும் வழியில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் கூறுகையில், இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றிய விசாரணைகளைத் துரிதப்படுத்தி குற்றவாளிகளை கண்டு பிடிக்கும் நடவடிக்கைகளை எடுக்கும்படி மாநில முதல்வரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தி. மு. க. தொண்டர்களின் விடுதலைக்கு கோரிக்கை

(சென்னை)

...றக் கழகத் தொண்டர்கள்

புத்தளத்தில் அமெரிக்க

# வானொலியை எதிர்ப்போர் முதலில் புலிகளின்வானொலியைஎதிர்க்கட்டும்

### தகவல் துறை அமைச்சர்

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தில் அமெரிக்க ஒலிபரப்பு நிலையம் அமைக்கப்பட இருப்பதற்கு எதிர்ப்பு தெரிவிப்போர் முதலில் விடுதலைப் புலிகளின்வானொலிக்கு தமது எதிர்ப்பைக் காட்டட்டும் என்று தகவல்துறை இராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், கத்தோலிக்க மதகுருமாரும், மற்றையோரும் அமெரிக்க வானொலி நிலையத்திற்கு எதிர்ப்புக் காட்டுவது அர்த்தமற்றது என்றும், அது நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக செயற்பட்டு வரும் என்றும் நாட்டு நலனுக்கு ஊறு நேரக்...

பேசிய அமைச்சர் தமது உரையில் நாற்பது ஆண்டுகளுக்கு மட்டும் அமெரிக்க வானொலி நிலையம் செயற்படும் எனவும் சிறிலங்காவிற்கு கேடு பயக்கக் கூடிய எதையும் அது செய்யாது என்றும் உறுதிபடத் தெரிவித்தார். அத்துடன் இது போன்ற ஒப்பந்தங்கள்ரஷ்யா, சீனா, கொரியா போன்ற நாடுகளுடனும் செய்து கொள்ள சிறிலங்கா விருப்பம் கொண்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

## விவசாய டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வவுனியா விவசாயக் கல்லூரி - விவசாய டிப்ளோமா 1993 / 94 கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 02-07-1993 அன்று வெளிவந்துள்ளது. க. பொ. த.

அதாவது 20-08-1993 அன்று 17—25 வயதிற்கிடைப்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

அனுமதிக்கான போட்டிப் பரீட்சை பொது அறிவு, விஞ்ஞானம், விவசாயம் ஆகிய பாடங்களில் 28-08-93 அன்று

உண்டா எனவும் ஆராயப்பட்டு வருவதாகப் பொலிஸ் தரப்பு தெரிவிக்கின்றது.

எது எவ்வாறு இருப்பினும் இக்குண்டுவெடிப்பானது, ஜெயலலிதா அரசிற்கு நெருக்கடியை அதிகரிக்கும் என்பதைக் கூறுவதற்குப் பெரிய ஆராய்ச்சி ஒன்றும் தேவையில்லை. ஏற்கனவே சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டதாகவும், ஊழல் அதிகரித்துள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஜெயலலிதா அரசிற்கு இது பெரும் சவாலான தொன்றாகவே இருக்கும். மேலும், கடந்த மாதம் இடம்பெற்ற பிரதமர் நரசிம்மராவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்ததின் மூலம் முற்றிய பகையை இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மத்திய அரசு தீர்த்தும் கொள்ள வாய்பபும் உண்டு.

இருப்பினும், ஜெயலலிதா அரசிற்கு இக்குண்டு வெடிப்பு ஏற்படுத்தியுள்ள கெடுதல் என்பதை விட தமிழகத்திற்கு ஒட்டுமொத்தமாக ஏற்படுத்திய கெடுதல் பெரிதாகும். இந்தியாவிலேயே மதக் கலவரங்கள் குறைவான மாநிலம் எனவும் மதபேதம் குறைந்த மாநிலம் எனவும் இதுவரை கணிக்கப்பட்டு வந்த தமிழகம், இனியும் அவ்வாறு இருக்குமா என்பது கேள்விக்குரியதொன்றே. மதத்தின் பெயரால் தமிழகத்தில் இரத்த ஆறு ஓடுவதற்குக் கட்டியம் கூறுவதாகவே இக்குண்டுத் தாக்குதல் அமைந்துள்ளதென்றால் அது மிகையில்லை.

ஒப்பீட்டு ரீதியில் பாரதீய ஜனதாக் கட்சி உட்பட அடிப்படை இந்து தீவிரவாத அமைப்புக்கள் பலவீனமாகவுள்ள மாநிலம் தமிழ்நாடாகும். அங்கு தனது செல்வாக்கை நிலைநாட்டுவதில் கடந்த சில வருடங்களாக பாரதீய ஜனதாக் கட்சியும், ஏனைய அமைப்புக்களும் பெரும் முயற்சி எடுத்து வந்தன. ஆனால், குறிப்பிடத்தக்க ரீதியான மக்களின் செல்வாக்கை பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம் மத ரீதியான மோதல்களில் ஈடுபட மக்கள் தயாராக இல்லை இதனால், தமிழகததில் இந்து அடிப்படை வாதிகளும் அடக்கிய வசிக்க வேண்டி இருந்தது.

ஆனால், இக்குண்டுவெடிப்பின் மூலம் அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மக்கள் மனங்களின் ஓரத்தில் எச்ச சொச்சமாக ஒட்டிக் கொண்டிருந்த மதவெறியைக் கிளறி விடுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. குண்டுவெடிப்பிற்கு காரணம் எதுவானாலும், அரசியல்வாதிகளால் மதங்களுக்கிடையிலான மோதலாகவே இது மாற்றப்படும். இதன் மூலம் தமிழகத்தில் மத வன்முறை பெருகவும், இதன் காரணமாக மத அடிப்படை வாதிகள் தமது செல்வாக்கை வளர்த்துக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாகலாம்.

இந்நிலையானது தமிழகத்தைப் பல்வேறு வழிகளிலும் பாதிக்கக் கூடும். மதக் கலவரங்களினால் தமிழகம் அல்லோலகல்லோலப்படும் அதே வேளை அரசியலில் இந்து அடிப்படைத் தீவிரவாதிகளின் கை ஓங்கக் கூடும். இன்று மத்தியில், பாரதீய ஜனதாக் கட்சியின் வளர்ச்சி விளைவித்திருக்கும் அரசியல் ஸ்திரமற்ற தன்மை போன்றதொரு நிலை தமிழகத்தில் உருவாகக் கூடும். அப்பொழுது திராவிடக் கட்சிகள் என்றுமில்லாத ஒரு சவாலை சந்திக்க வேண்டிவரினும் ஆச்சரியமில்லை.

பம்பாய், கல்கத்தா குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து சென்னையிலும் இது நிகழ்ந்திருப்பதால் இது பல்வேறு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை என்றும், அதனால் சி. பி. ஐ இதனை விசாரிக்க வேண்டும் என்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட்டுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், தமது வேண்டுகோள் குறித்து உள்நாட்டுப் பாதுகாப்பு இணை அமைச்சர் எதனையும் தரவில்லை எனவும் பிரதமரின் கவனத்திற்கு இதனைக் கொண்டுவர இருப்பதாகக் கூறியதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்ட பின் டில்லி திரும்பும் வழியில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் கூறுகையில், இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றிய விசாரணைகளைத் துரிதப்படுத்தி குற்றவாளிகளை கண்டு பிடிக்கும் நடவடிக்கைகளை எடுக்கும்படி மாநில முதல்வரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தி. மு. க. தொண்டர்களின் விடுதலைக்கு கோரிக்கை

(சென்னை)

கைதாகியுள்ள திராவிட முன்னேற்ற கழகத் தொண்டர்களை உடன் விடுதலை செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

கடந்த சனிக்கிழமையன்று சென்னையில் குடிநீர் கோரி போராட்டம் நடத்திய போது கைதான திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

தமது கோரிக்கைகளை வலியுறுத்தி அரசின் கவனத்திற்கு கொண்டுவர போராடுபவர்களை கைது செய்து தடுத்து வைப்பது ஜனநாயக நெறிமுறையை மீறும் ஒரு செயலாகும் என்றும் அக்கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

## தமிழகமுதல்வரின் கூற்றுக்கு மாநில ஆளுநர் மறுப்பு

(சென்னை)

சென்னையில் நேரிட்ட குண்டுவெடிப்பு சம்பவம் பற்றி உரிய நேரத்தில் மாநில ஆளுநருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக மாநில முதல்வர் ஜெயலலிதா உறுதிபடக் கூறியிருப்பதை தமிழக ஆளுநர் சென்னாரெட்டி மறுத்துள்ளார்.

பிற்பகல் 1 40 மணியளவில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு சம்பவம் பற்றி செய்தி நிறுவனங்கள் மூலம் தகவல் அறிந்ததைத் தொடர்ந்து சம்பவம் நேரிட்ட இடத்திற்கு செல்வதற்காக தான் புறப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் பிற்பகல் 5.00 மணியளவில் தான் மாநில நிர்வாகம் தனக்கு அறியத் தந்ததாகவும் ஆளுநர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## சீன பயணிகள் விமானம் தைவானுக்கு கடத்தல்

(பீகிங்)

சீனாவில் பீகிங்விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட போயிங் 767 விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தினுள் தைவானுக்கு கடத்தப்பட்டுஉள்ளது. இந்த விமானத்தில் 167 பயணிகளும் 22 சிப்பந்திகளும் இருந்ததாகக் கூறப்படுகிறது இப்பயணிகள் பீகிங் விமான நிலையத்திலிருந்து இந்தோனேசியாவின் ஜகார்த்தா விமான நிலையத்திற்கு பயணம் மேற்கொண்டிருந்தனர். தனியொருகடத்தல்காரர் தான் விமானத்தினுள் ஏறியதாகவும், பலவந்தமாக இவ்விமானம் தைப்பே விமான நிலையத்திற்கு கொண்டு சேர்க்கப்பட்டிருப்பதாகவும் விமானிகள், சிப்பந்திகள், மற்றும் பயணிகள் பாதுகாப்பாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து மாதங்களுக்கிடையில் சீனாவின் விமானம் கடத்தப்படுவது இது மூன்றாவது முறையாகும்.

### பாகிஸ்தானில் பூமியதிர்ச்சி

(லாகூர்)

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் பூமியதிர்ச்சியின் காரணமாக இருபது பேர் காயமடைந்துள்ளனர். வடக்கு பாகிஸ்தானில் ஏற்பட்ட இப்பூமியதிர்ச்சி மீஜர் அளவு 5.4 எனப் பதிவாகியுள்ளது. பாகிஸ்தானின் பெஷாவர். இஸ்லாமாபாத்.ராவலபிண்டி போன்ற நகரங்கள் இப் பூமியதிர்ச்சியினால் பாதிக்கபபட்டுள்ளது.

## புலிகளின்வானொலியைத் தாக்கட்டும்

### தகவல் துறை அமைச்சர்

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தில் அமெரிக்க ஒலிபரப்பு நிலையம் அமைக்கப்பட இருப்பதற்கு எதிர்ப்பு தெரிவிப்போர் முதலில் விடுதலைப் புலிகளின்வானொலிக்கு தமது எதிர்ப்பைக் காட்டட்டும் என்று தகவல்துறை இராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், கத்தோலிக்க மதகுருமாரும், மற்றையோரும் அமெரிக்க வானொலி நிலையத்திற்கு எதிர்ப்புக் காட்டுவது அர்த்தமற்றது என்றும், அது நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக செயற்பட்டு வரும் என்றும் நாட்டு நலனுக்கு ஊறு நேரக்கூடிய எந்த விடயத்தையும் இவ் வானொலி ஒலிபரப்பாது எனவும் தெரிவித்துள்ளார்.

பொத்துறவா நகரில் பௌத்த விகாரையொன்றில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அமைச்சர் தமது உரையில் நாற்பது ஆண்டுகளுக்கு மட்டும் அமெரிக்க வானொலி நிலையம் செயற்படும் எனவும் சிறிலங்காவிற்கு கேடு பயக்கக் கூடிய எதையும் அது செய்யாது என்றும் உறுதிபடத் தெரிவித்தார். அத்துடன் இது போன்ற ஒப்பந்தங்கள்ரஷ்யா,சீனா,கொரியா போன்ற நாடுகளுடனும் செய்து கொள்ள சிறிலங்கா விருப்பம் கொண்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

### தும்புத்தொழிற்சாலை திறப்பு விழா

முழங்காவில் அசோக் எழுச்சிக் கிராமத்தில் அமைந்துள்ள குடியேற்றத் திட்டத்தில புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தும்புத் தொழிற்சாலையொன்று கடந்த ஜூன் 7ஆம் திகதி மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் கைத்தொழில்பகுதியினரால் சுமார் 12 30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கேணல் கிட்டு, கப்டன் குவேனி ஆகியோரது உருவப் படங்கள் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன.

### தையல் கண் காட்சியும் விற்பனையும்

[தொல்புரம]

தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தின் சண்டிலிப்பாய் பிரதேசநிலையத்தினால் தையல் கண்காட்சியும், விற்பனையும் நடாத்தப்படவுள்ளது.

மேற்படி கண்காட்சி 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில சர்வோதய மாவட்ட இணைப்பாளர் திரு பா. செல்வரத்தினம் தலைமையில் சண்டிலிப்பாய் பிரதேச நிலையமான உடுவில் றோட் மானிப்பாய் காரியாலயத்தில் தையல் பயிற்சி பெற்று வெளியேறும் இரண்டாம் கட்ட மாணவிகளினால் நடாத்தப்படவுள்ளது. இவ் வைபவத்தில் பயிற்சியை நிறைவு செய்துள்ள மாணவிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது

## விவசாய டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வவுனியா விவசாயக் கல்லூரி - விவசாய டிப்ளோமா 1993 / 94 கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 02-07-1993 அன்று வெளிவந்துள்ளது. க. பொ. த. (உ/த) பரீட்சையில் விலங்கியல், தாவரவியல், இரசாயனவியல், பௌதீகவியல், விவசாயம், புவியியல் முதலான பாடங்களுள் யாதாயினும் நான்கு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்து, விண்ணப்ப முடிவு திகதி அன்று அதாவது 20-08-1993 அன்று 17—25 வயதிற்கிடைப்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

அனுமதிக்கான போட்டிப் பரீட்சை பொது அறிவு, விஞ்ஞானம், விவசாயம் ஆகிய பாடங்களில் 28-08 93 அன்று நடைபெறவுள்ளது பரீட்சை நிலையங்கள் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு முதலான நகரங்களில் அமையவுள்ளன. மேலதிக தகவல்களுக்கு 02-07-93ந் திகதி கெஸட் வர்த்தமானியைப் பார்க்கவும்.

## நில அளவையாளர் பதிவு செய்ய நில அளவைப்பிரிவு கோரிக்கை

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள அனுமதி பெற்ற நில அளவையாளர்கள் அனைவரையும் யாழ் மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் பதிவு செய்து கொள்ளும்படி நில அளவைப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதற்கான படிவங்கள் நாளை (12-08-93) முதல் எதிர்வரும் திங்கட்கிழமை (16 08-93)வரை விநியோகிக்கப்படுமெனவும். நில அளவையாளர் ஒவ்வொருவரும் நேரில் சமுகம் அளித்து இப் படிவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் நில அளவைப் பிரிவினர் விடுத்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## கண்ணகிபுரம் மக்கள் குடியேற படையினர் அனுமதி மறுப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் பனங்காடு கிராமத்தில் கடந்த 39 மாதங்களாக வாழும் கண்ணகிபுரத்தைச் சேர்ந்த தமிழர்கள் மீளச் சென்று குடியேறுவதற்கு பாதுகாபபுபடையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

புனர்வாழ்வு அமைச்சரும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பி தயாரத்னாவுடன் இம் மக்கள் தொடர்புகொண்ட போது ஜூலை 31-ம் திகதி முதல் கட்டம்கட்டமாக மீள்குடியேற அனுமதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து இம் மக்கள் கண்ணகிபுரம் பகுதியில் தமது காணிகளைத் துப்புரவாக்கி வந்தனர். அத்துடன் இந்த 330 தமிழ்க் குடும்பங்களும் மீள்குடியேறுவதற்கு ஜேர்மன் அரசாங்கம் உதவியளிக்க முன்வந்திருந்தது. ஜேர்மன் தூதுவராலயத்தைச் சேர்ந்த குளோஸ் அதிகாரிகள் சகிதம் சென்று அக்கிராமத்தையும் பார்வையிட்டிருந்தனர்.

**அளவான நீர்ப்பாசனம்**
**அருமையான சிம்மாசனம்**

ஈழநாதம்

# இலங்கை அகதிகளை அனுப்ப சுவிஸ் அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

சுவிட்ஸர்லாந்திலுள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவது குறித்து சுவிஸ் அரசுக்கும் சிறிலங்கா அரசிற்கும் கொழும்பில் பேச்சுகள் நடைபெற்றுள்ளன. சுவிஸ் அகதிகள் திணைக்கள அதிகாரி சுவிஸ் அரசின் சார்பில் சிறிலங்கா அரசுடன் பேசிய பின் சுவிஸ் திரும்பியுள்ளார்.

இதே சமயம் அகதிகளை திருப்பியனுப்புவது தொடர்பாக சுவிஸ் அரசுடன் சிறிலங்கா அரசு ஒப்பந்தம்ஒன்றை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்படி சுவிஸ்ஸில் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்த இலங்கையர்களில் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்கள் உடனடியாக திருப்பியனுப்பப்படுவர். இவர்

பிரிட்டிஷ் அன்பளிப்பு

கள் டிசம்பருக்கு முதல் திருப்பி அனுப்பப்படுவர்.

திருப்பி அனுப்பப்படும் அகதிகளில் எத்தனைபேரை சிறிலங்கா அரசு ஏற்றுக்கொள்ளும் என முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை. இவர்களுக்கான பாதுகாப்பை யூ. என். எச். சீ. ஆர். மேற்பார்வையிடும் என்றும் அகதிகளை திருப்பியனுப்புவதற்கான செலவை சுவிஸ் அரசு பொறுப்பேற்கும் என்றும் சுவிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும்

## போரூட் பிரதிநிதிகள் யாழ். விஜயம்

(வடமராட்சி)

அரச சார்பற்ற போரூட் நிறுவனப் பிரதிநிதிகள் மூவர் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

கொழும்பு திட்டப் பணிப்பாளர் திரு. சற்குணராசா பாலர் பாடசாலை ஆலோசகர் செல்வி கதிதரின் நிவாரண திட்டங்களுக்கு பொறுப்பான திரு. லார்ஸ் ஆகியோரே வந்தனர்.

இவர்கள் சில தினங்கள் இங்கு தங்கியிருந்து தமது திட்டங்களைப் பார்வையிடுவர். (யோ)

## மூலிகை கண்காட்சி

யாழ். மாநகர சபையின் சித்த மருத்துவப் பிரிவினால் நடாத்தப்படும் மூலிகைக் கண்காட்சி நல்லூர் சிவன் கோவிலுக்கு முன்பாகவுள்ள இடத்தில் இன்று காலை 8 30 மணி அளவில் மாநகரசபை ஆணையாளரால் திறந்து வைக்கப்படும். மக்களும் குறிப்பாக மாணவர்கள் சித்த மருத்துவத்தின் பலனை அறியவும், பிரதேசத்திலுள்ள மூலிகைகளைப் பயன்படுத்தும் முறைகளையும், அதன் மருத்துவப் பயன்களை அறிந்து கொள்ளவும் மூலிகைகளை இனங்கண்டு கொள்ளவும் வீட்டுத் தோட்டமாக எப்படி அபிவிருத்தி செய்யலாம் என்று அறிவதற்கும் இக்கண்காட்சி உதவியாக இருக்கும் என யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிக்கிறார்.

## பிரயோக கணிதம் நடைபெறும்

முன்னர் அறிவிக்கப்பட்டபடி பிரயோக கணித பாடத்திற்கான பகுதி I, பகுதி II இற்குரிய விசேட பரீட்சைகள் எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் நடைபெறுமென யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கான வினாத்தாள்கள் நேற்று யாழ். கல்வித் திணைக்களத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## மனித உரிமை சிபார்சுகள்; அரசு அமுலாக்கவில்லை

சர்வதேச மன்னிப்புச் சபைகண்டனம்

(லண்டன்)

சிறிலங்கா அரசுக்கு தாம் முன்னர் சிபார்சுசெய்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான 32 சிபார்சுகளில் பலவற்றை அரசு இன்னமும் அமுல்செய்யவில்லை என சர்வதேச மன்னிப்புச்சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசியா பிரிவுத் தலைவர் எலிசபெத் நிஸான் தாம் முன்பு அரசுக்கு சிபார்சு செய்த மனித உரிமை மீறல் தொடர்பான 32 விடயங்களில் 30விடயங்களை அப்போது அரசு உடனடியாக ஏற்றுக் கொண்டது ஆனால் அவற்றில் பல இன்னமும் அமுலாக்கப்படவில்லை என்றார்.

## உணவு முத்திரை விநியோகம்

காரைநகர் மத்திய கிராம சேவை அலுவலர் பிரிவைச் (ஜே/48) சேர்ந்த மக்களுக்கான உணவு முத்திரைகள் இன்று முதல், சுழிபுரத்தில் இயங்கும் காரைநகர் மத்தி கிராம சேவை அலுவலர் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளதாக கிராம சேவை அலுவலர் திரு. எஸ். கே. சிவலிங்கம் அறிவித்துள்ளார்.

## இந்தியாவில் நடவடிக்கை 'ஏசியா வோச்' கண்டனம்

(லண்டன்)

இந்தியாவிலுள்ள அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவதற்கு எடுக்கும் நடவடிக்கைகளை நிறுத்தும்படி அமெரிக்காவிலிருக்கும் 'ஏசியா வோச்' என்னும் மனிதஉரிமைகள் சங்கம் இந்தியாவைக் கேட்டுக்கொண்டுள்ளது. இலங்கையில் தமது இடங்களில் வசிப்பதற்கு இவ் அகதிகளுக்கு முடியாதிருப்பதாகவும் அவர்கள் பலவந்தமாக இங்கு அனுப்பப்படுவதாகவும் 'ஏசியா வோச்' மேலும் கூறியுள்ளது. இவ்வாரத்தினுள் அகதிகள் 7000 பேர் வரையில் இங்கு அனுப்புவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## உற்சவம்

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் கார்த்திகை உற்சவம் இன்று காலை 9-00 மணிக்கு விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும். மாலை 5 00 மணிக்கு முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக வீதிவலம் வருவார். (24)

## மருத்துவ உபகரணங்கள்; கொழும்பில் ஆலோசனை

(வடமராட்சி)

பிரிட்டிஷ் அரசாங்கம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்து கொழும்பில் வைக்கப்பட்டிருக்கும் மருத்துவ உபகரணங்களை யாழ்ப்பாணம் கொண்டு வருவது குறித்து ஆலோசனையை நடாத்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள்குழு ஒன்று நேற்று கப்பல் மூலம் புறப்பட்டது.

இவர்கள் மருத்துவ உபகரணங்களைப் பார்வையிட்டு சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை ஒன்றையும் மேற்கொள்வர்.

யாழ். அரச அதிபரின் அவசர பணிப்பையடுத்து இக்குழு நேற்று அவசர அவசரமாகப் புறப்பட்டது. வைத்தியசாலை உதவி பணிப்பாளர் இரா இராஜேஸ்வரி தலைமையில் இக்குழு செல்கிறது. (யோ)

## கொழும்பு செல்ல இருக்கும் நோயாளர் கவனத்துக்கு

வைத்திய சிகிச்சைக்காக கொழும்பு செல்ல வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சமுகமளிக்குமாறு யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுள்ளார்.

மேற்படி நோயாளர்களை சிபார்சுக்கடிதங்கள், அடையாள அட்டை ஆகியவற்றுடன் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## சிறிலங்கா ஜனாதிபதிக்கு மேலதிக பாதுகாப்பு

இரு கூலிப்படையினர் கைதாம்

சிறிலங்கா ஜனாபதி டி. பி. விஜேதுங்காவிற்கு மேலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. மேலதிக பாதுகாப்பிற்கென கொமாண்டோ படையினர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அச் செய்திகள்மேலும் தெரிவிக்கின்றன.

அண்மையில் டி. பி. விஜேதுங்காவை கொல்லும் திட்டத்துடன் கொழும்பில நடமாடிய ஏழுபேர் கைது செய்யப்பட்டனர் எனவும் இவர்களில் இருவர் கூலிபபடையினர் என விசாரணைமூலம் தெரியவந்துள்ளதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## விரிவுபடுத்தப்பட்ட கண்காட்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நல்லூர் மகோற்சவ காலத்தை முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் பொருண்மிய கண்காட்சியானது தற்போது மேலும் பல புதிய விடயங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுசிறப்பாக நடைபெற்று வருகிறது.

சுயசார்புப் பொருண்மிய நகர்விற்கான முயற்சிகளை விரிவாக எடுத்து விளக்கும் இக் கண்காட்சியானது மாணவர்கள், கல்விமான்கள், பொருளியலாளர்கள், ஆர்வலர்கள், நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறையுடையோருக்கும் பெரும் பயன் விளைவிப்பதாக அமைந்துள்ளது.

கட்டணம் எதுவுமற்ற கண்காட்சியிலே நாள் முழுவதும் பார்வையிடும் மக்களுக்கு போதிய விளக்கமளிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. எனவே கண்காட்சியினை பார்வையிடச் செல்பவர்கள் விளக்கமளிப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ளவர்களை முழுமையாக பயன்படுத்தி தங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கேட்டுக் கொள்கிறது

## சான்றிதழ் வழங்கல்

(பருத்தித்துறை)

யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு கிராமஅலுவலர்களுக்குநடாத்திய பயிற்சிநெறி நிறைவுநாள் விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [25]

## 24 பயணிகளுக்கு

## படகோட்டிகள்

விதிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்திருந்த போதும் அதனை மீறி பயணிகளை படகுமூலம் சட்டவிரோதமாக ஏற்றிச் சென்றமைக்காக இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படலாம்என அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (பா)

கப்பட்டுள்ளது.

இவர்களை ஏற்றிக்கொண்டு "குமாரி" கப்பல் திருக்கோணமலை வரை செல்லவுள்ளது. மேலும் இக்கப்பல் இன்னும் சில தினங்களில் திருக்கோணமலை நோக்கிப் புறப்படும்என எதிர்பார்க்கப்படுகின்றது. (பா)

காரைநகர் பல நோ. கூ. சங்க

### கிளை நிருவாக சபை உத்தியோகத்தர் தெரிவு

காரைநகர் ப. நோ. கூ. சங்க கிளை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட கிளை நிருவாக சபைக்கிடையிலான உத்தியோகத்தர் தெரிவு 14.8.93 சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் பி. ப. 4 00 மணிவரையும் வழக்கம்பரையில் உள்ள மொத்த நிலையத்தில் நடைபெறும். தங்களுக்கு ஏற்கனவே தரப்பட்ட நேர அட்டவணைக்கு அமைவாக சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

க. நடராசா
செயலாளர்

374, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
11-8-93

(சி/7177)

### மட்கல உற்பத்தியாளர்களுக்கு

யாழ். குடாநாட்டில் இன்று எதிர்நோக்கப்பட்டு

### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 10-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10571

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-6452, 27-9492, 42-3419, 24-5137, 24-5121
42-0733, 27-2143, 28-5039, 26-6320, 26-3294
42-2157, 28-8367, 24-6480, 26-4648, 41-8686
40-1617, 28-6853, 40 2677, 41-9895, 24-7324.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-0355, 24-0917, 24-4390, 22-4895, 24-7267
24-5119, 26-3068, 42-9220.

### நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



# உத்தியோகத்தர் தெரிவு

காரைநகர் ப. நோ. கூ. சங்க இளை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட இளை நிருவாக சபைக்கிடையிலான உத்தியோகத்தர் தெரிவு 14.8.93 சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் பி. ப. 4 00 மணிவரையும் வழக்கம்பரையில் உள்ள மொத்த நிலையத்தில் நடைபெறும். தங்களுக்கு ஏற்கனவே தரப்பட்ட நேர அட்டவணைக்கு அமைவாக சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

க. நடராசா
செயலாளர்

374, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
11-8-93

(சி/7177)

---

## மட்கல உற்பத்தியாளர்களுக்கு

யாழ். குடாநாட்டில் இன்று எதிர்நோக்கப்பட்டு பாரிய விறகுப் பிரச்சினைகளை சமாளிக்குமுகமாக யாழ் குடாநாடெங்கும் பரவலாகவும், விரைவாகவும் இரட்டைச் சூட்டடுப்புகளை கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

எனவே இரட்டைச் சூட்டடுப்பு உற்பத்தியில் ஈடுபட ஆர்வமுள்ள மட்கல உற்பத்தியாளர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

சக்திப்பகுதி,
த.பொ.மே. கழகம்,
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி, தாவடி.

(சி-7176)

---

திடீரென ரசம் அருந்த வேண்டும் அல்லது
உணவுடன் கலந்து உண்ண வேண்டும்
எனத் தோன்றுகின்றதா?
அரைக்கத் தேவையில்லை, கொதிக்கத் தேவையில்லை.
இதோ
"ஒரு நிமிடத்தில் சுவைமிகு ரசம்"
தயார்.
ஆச்சரியமாக உள்ளதா?
ஆம்.

Tasty!

புதிய
அறிமுகம்
'திடீர் ரசம்'
(INSTANT RASAM)

[இரசாயன சேர்க்கைகள் அற்றது]

1 தேக்கரண்டி திடீர் ரசக்கிறீமை 1 டம்ளர் சுடுநீரில் கலக்கும்போது சுவையான ரசம் உங்களுக்குக் கிடைக்கும்.

100 சிராம் பொதியின் விலை ரூ. 17/50 மட்டுமே.
இன்றே உங்கள் வியாபாரியிடம் கேட்டு
வாங்கிப் பாவியுங்கள்.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-7157)

---

சேவை அலுவலர் திரு. எஸ். கே. சிவலிங்கம் அறிவித்துள்ளார்.

வா.

யாழ். அரச அதிபரின் அவசர பணிப்பையடுத்து இக் குழு நேற்று அவசர அவசர

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 10-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10571

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-6452, 27-9492, 42-3419, 24-5137, 24-5121
42-0733, 27-2143, 28-5039, 26-6320, 26-3294
42-2157, 28-8367, 24-6480, 26-4648, 41-8686
40-1617, 28-6853, 40 2677, 41-9895, 24-7324.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-0355, 24-0917, 24-4390, 22-4895, 24-7267
24-5119, 26-3068, 42-9220.

---

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

# 'Wild Geese'

'வைல்ட் கீஸ்'
[தமிழ் விளக்கம்]
சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி (சி-7114)

---

## அறிவித்தல்

மட்டுப்படுத்தப்பட்ட பருத்தித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின்

### புனரமைப்பு ஆலோசனைக் கூட்டம்

பதிவு இல. J1586-01-03-1972

மட்டுப்படுத்தப்பட்ட பருத்தித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க புனரமைப்பு ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 28-08-1993 சனிக்கிழமை மு. ப 10 மணியளவில் சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறும். மேற்படி சங்கத்தின் சகல அங்கத்தவர்களும் அதாவது தொண்டைமானாறு தொடக்கம் நாகர்கோவில் வரையான சகலகிளைகளின் சகல அங்கத்தவர்களும் கூட்டத்திற்கு தவறாமல் சமுகம் கொடுக்கும்வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வடமராட்சி-வடக்கு கடற்றொழில்
சங்கங்களின் ஒன்றியம்
[5662]

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆவணி மாதம் 11-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

## ...ஜனாதிபதிக்கு மேலதிக பாதுகாப்பு

### இரு கூலிப்படையினர் கைதாம்

சிறிலங்கா ஜனாபதி டி. பி. விஜேதுங்காவிற்கு மேலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. மேலதிக பாதுகாப்பிற்கென கொமாண்டோ படையினர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

அண்மையில் டி. பி. விஜேதுங்காவை கொல்லும் திட்டத்துடன் கொழும்பில நடமாடிய ஏழுபேர் கைது செய்யப்பட்டனர் எனவும் இவர்களில் இருவர் கூலிபபடையினர் என விசாரணைமூலம் தெரியவந்துள்ளதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

---

படகோட்டிகள்

விதிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்திருந்தபோதும் அதனை மீறி பயணிகளை படகுமூலம் சட்டவிரோதமாக ஏற்றிச் சென்றமைக்காக இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படலாம்என அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (பா)

---

சுட்டிலக்கம்

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவற்றினை நாளை அந்தந்தப்பகுதி கோட்டங்களில் பாடசாலை அதிபர்கள்பெற்று மாணவர்களுக்கு விநியோகிக்கும்படி யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார். (பா)

---

பாதுகாப்பு

கமின்மையும் வெலிஓயாவில் முக்கிய முகாம் அழிக்கப்பட்டதற்கு மிக முக்கிய காரணமாக இருந்தது என இப்பாதுகாப்பு மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் மாநாட்டின் ஒரு கட்டத்தில் கோபம் மிகுந்திருந்த வேளை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சேபால ஆட்டிகலசில வருடங்களின்முன் தான் பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது தயாரித்த "போரிடும் பிரிவுகளின் மூலோபாயம்" Battle Groups Strategy) என்ற அறிக்கையை அனைவரதும் கவனத்திற்கும் கொண்டு வந்தார். இந்த அறிக்கை முழுமையாக பாதுகாப்பு வட்டாரங்களினால் செயற்படுத்தப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது. அப்போது ஜனாதிபதி விஜேதுங்க, ஆட்டிகலவின் அறிக்கையை கவனமாக பரிசீலிக்கும் படியும் அதனை அமுலுக்கு கொண்டுவரும்படியும் உயர் படை அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

சேபால ஆட்டிகலவின் அறிக்கையில் கெரில்லா இயக்கத்திற்கு எதிராக விசேட அதிரடிப்படைகள் மரபுவழியான போரை நடத்துவதை விடுத்து அவர்களுக்கு எதிராக அதிரடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

---

திகதி ஞாயிற்றுக்கிழமையாம். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [25]

---


24 பயணிகளுக்கு

கப்பட்டுள்ளது.

இவர்களை ஏற்றிக்கொண்டு "குமாரி" கப்பல் திருக்கோணமலை வரை செல்லவுள்ளது. மேலும் இக்கப்பல் இன்னும் சில தினங்களில் திருக்கோணமலை நோக்கிப் புறப்படும்என எதிர்பார்க்கப்படுகின்றது. (பா)

---

# நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## மேஜர் வேலன்/மலரவன்

[சுந்தரலிங்கம் சுந்தரவேல்]

பிறப்பு
11-08-69

வீரச்சாவு
16-01-93

தங்கத் தமிழுக்காய்
பொங்கி எழுந்த புலிகள் இவர்கள்
மேலாதிக்க வல்லூறுகளின் சதிவலையில்
களமாட எழுந்தார்கள்.

★

வங்கக்கடலில் இந்திய அரசின் நயவஞ்சகத்தால் மூத்த தளபதி கிட்டு அவர்களுடனும் எட்டு வேங்கைகளுடனும் வீரச்சாவைத் தழுவிய மேஜர் வேலன்/மலரவன் அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகள் 11-08-93 இன்று காலை 6. 00 மணி தொடக்கம் எமது இல்லத்தில்இடம்பெறும். இந்நிகழ்விலும் மதியபோசனத்திலும் போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

தந்தை,
சகோதர, சகோதரிகள்.

(5652)